## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 57. ஸ்ரீமான்.ஜெயவந்த்ஜி

தந்தை சேர்த்த சொத்துக்காகப் போராடும், பகை பாராட்டும் ஏன் கொலைகளே செய்யும் மக்கள் மலிந்த காலம் இது. ஒரு ஜான் சொத்துக்காகப் பல ஆண்டுகளாய்ப் பெற்றவர்களையும் உடன் பிறந்தோரையும் கூண்டில் ஏற்றி உறவுகளுக்குப் பூட்டுப் போடும் உலகம் இது.கலியுகத்தில் மீண்டும் அனைவரும் காண விளைந்த ஓர் அவதாரம் இவரது வாழ்வில் ஏற்பட்டது.

**பரம்பரைச் சொத்தும் ஆன்மீகச் சொத்தும்**

இதே சூழலில் தான் ஸ்ரீமான் ஜெயவந்த்ஜியின் வாழ்க்கையை அறிமுகம் செய்கிறோம்.வடதேசத்தில் டில்லிக்கு அருகில் வாழ்ந்த பரம்பரைப் பணக்காரர் இவர்.குடும்பச் சொத்தும் இவரது உழைப்பின் மூலம் பெற்ற சொத்தும் வாரிக் குவிந்த நிலையில், மிகச் சிறிய வயதில் இருந்து மேற்கொள்ளும் ஆன்மீக விசாரணைகள் அவருள் பெரும் மாற்றங்களை உண்டாக்கின.

ஒரு கட்டத்தில் அவர் தன் வ்யாபாரங்களைத் தன் 4 மகன்களிடம் விட்டுவிட்டு முழுக்க முழுக்க ஆன்மீக விசாரணையிலும் பக்தி வாழ்விலும் ஈடுபட்டார்.தன் சம்பாத்யம் மூலம் பெற்ற செல்வத்தில் இருந்து கோயில்களுக்கும் ஊருக்கும் பல நல உதவிகள் செய்தார்.

**இக்காலப் பெற்றோர்களுக்கு ஒரு பாடம்...**

இதை ஏற்றுக் கொள்ளாத மகன்கள் அவரிடம் அவரது சேவைகளைக் குறைத்துக் கொள்ளுமாறு வேண்டினர். செல்வத்தின் பயனே ஈதல் என்று அவர் உணர்த்தினார்.மேலும் அவர் தன் மகன்களுக்கு உரிய கடமைகளைச் செய்து விட்டுத் தான் தன் உழைப்பால் ஈட்டிய செல்வத்தைத் தான் தர்ம காரியங்களுக்குச் செலவிடுவதாக எடுத்தும் விளக்கினார்.

**வழக்குத் தொடுத்த மகன்கள்**

இதை எல்லாம் ஏற்றுக் கொள்ளாத மகன்கள் அரசனிடம் சென்று மனு கொடுத்து இவரை அழைத்து வழக்கு விசாரணை செய்து சொத்துக்களைப் பிரித்துத் தருமாறு வேண்டினர். அரசனும் இவரை அழைத்து வந்து விசாரிக்க, இவர் ஆன்மீக நியதிகளை எடுத்துக் கூறி எதையும் தான் மகன்களின் சொல்படி அதர்மமாகக் கூற முடியாது என்றார்.இதைக் கேட்டு ஆத்திரம் கொண்ட அரசன் அவரின் சொத்துக்களை பறிமுதல் செய்து வரும் படி ஆணை இட்டு, மேலும் அவரைக் கட்டிக் குளத்தில் வீசும்படி உத்தரவிட்டான்.

**அரண்ட மகன்களின் அந்தோ பரிதாப நிலை**

சற்றும் இவ்வுத்தரவை எதிர்பாராத அவர் மகன்கள் எவ்வளவு எடுத்துக் கூறியும் அரசன் தன் உத்தரவை மாற்றவில்லை.காரணம் அவன் தெய்வ நம்பிக்கை அற்றவன்,அவனுக்கு இவரது வாழ்க்கை பிடிக்கவில்லை, கொள்கைகள் பிடிக்கவில்லை.

**குளத்துள் எழுந்த சத்யம்**

மறுநாள் ஊரே கூடி அழுதது. ஒரு நல்ல மனிதனுக்கு ஏற்பட்ட கதியை எண்ணி அழுதது.இவரது குடும்பத்தைத் தூற்றியது. மகன்களை ஊரை விட்டு விலக்கினார் ஊர்த்தலைவர்.இவரது மனைவி ஏதும் சொல்லாமல் நிகழும் அனைத்தும் ஈசனின் லீலை என்ற உயர்ந்த ஞானத்தில் ஈசனை மனதில் த்யானம் செய்தவண்ணம் வீட்டில் தங்கி விடுகிறார்.

**"பாண்டுரங்கா! என் கணவர் சதா உன்னை எண்ணி வாழ்பவர்.அதிலும் அனைவரின் நலனுக்காக தேவரீர் அன்று கூர்மாவதாரம் செய்ததை எண்ணி எண்ணி பக்தி செய்வாரே! ஒரு ஆமை கூட தன்னால் ஆன சேவையை உலகிற்குச் செய்யும் போது, மனிதன் தன்னால் முடிந்த அனைத்து நற்காரியங்களையும் செய்ய வேண்டும் என்றே தேவரீர் உணர்த்துகிறீர்! பரவாயில்லை! உமது எண்ணப்படி நடக்கட்டும்!"** என்று பாண்டுரங்க த்யானத்தில் ஆழ்ந்தார்.

அங்கோ ஊரின் குளத்துள் ஜெயவந்தை சாக்கில் கட்டி உள்ளே வீசினர் வீரர்கள். மகன்கள் "ஐயோ அப்பா!" என்று உருண்டு அழுதனர்.மக்கள் மகன்களை அடிக்கவும் செய்தனர்.ஒரே களேபரம்! ஒரே அல்லோலம்! ஊரார் அழுதபடியே குளத்தை விட்டு அகலும் போது குளத்துள் இருந்து சத்தம் வர, அனைவரும் திரும்பிப் பார்க்க, ஒரு பெரிய ஆமை வெளியில் வரத்தொடங்கியது.அதன் முதுகில் ஜெயவந்தைக் கட்டி வைத்த மூட்டை!

ஊரார் கூடி பக்தி மேலிட பஜனைகள் பாட, ஆமை மூட்டைக் கரையில் தள்ளிவிட்டு மீண்டும் குளத்துள் சென்றது.மூட்டை அவிழ்த்த மக்கள் ஜெயவந்தை மீட்டனர்.அவரோ ஆழ்ந்த சமாதியில் லயித்துக் கிடந்தார்.நீண்ட நேரம் கழித்து அவர் சமாதி கலையும் போது, **"பாண்டுரங்கா! என்னே உன் மஹிமை? ஆஹா தேவர்களையும் அசுரர்களையும் தாங்கி, மந்தார மலையை ஆமை வடிவில் தூக்கினாயே! ஐயோ உன் முதுகில் ரத்தம் வழிகிறதே! ரங்கா!"** என்று அழுதார்.

அவரது பாவ பக்தியையும் அவரது தூய பக்தியில் விளைந்த மறுகூர்ம அவதாரத்தையும் எடுத்துக் கூறக் கேட்டு அவரும் அவரது மனைவியும் உடனே பண்டரீபுரம் நோக்கி ஓட ஆரம்பித்தனர்.மகன்களும் தான்.....

ஹரி ஓம்!